IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO: 199/2013

**<u>DEP OF WITNESS:</u> <u>PW2</u>**

| | |
|---|---|
| NAME: ஷமீல் அகமது | RELIGION:Muslim |
| FATHER NAME: சபிர் அகமது | CASTE: |
| VILLAGE:Pernambut | OCCUPATION: |
| TALUK:Pernambut | AGE:55 |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 29-01-2019

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

நான் இந்த வழக்கில் 7-ம் வாதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 7-ம் வாதியாக சேர்க்கவேண்டும் என்று நானே மனு தாக்கல் செய்து அதன் பேரில் தாவாவில் 7-ம் வாதியாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு 30.08.2013-ம் தேதியில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த தாவாவை ஆரம்பத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சலீம் பாஷா என்பவர் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சலீம் பாஷா என்பவர் தற்பொழுது உயிரோடு இல்லை என்றால் சரிதான். சலீம் பாஷாவின் வாரிசுதாரர்கள் 2 முதல் 6 வாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்து சலீம் பாஷாவிற்கு சொந்தமானது என்று தாவா தாக்கல் செய்துள்ளார். இந்த தாவாவை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் லோகநாதன் மற்றும் அவருடைய தம்பிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள். இந்த தாவாவை தாக்கல் செய்த தேதியான 30.08.2013-ம் தேதியில் பிரதிவாதிகள் என்னிடம் வந்து வழக்கு சொத்து குறித்து தகராறு செய்தார்களா என்றால் இல்லை நான் 2017-ம் ஆண்டில் தான் சொத்தை வாங்கினேன். 2017-லில் நான் சொத்தை வாங்கிய பிறகு பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்தார்களா என்றால் பிரச்சனை செய்தார்கள். எந்த தேதியில் பிரச்சனை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 30.08.2013-ம் தேதியில் வழக்கு சொத்தில் எனக்கு பாத்தியம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 2017-ம் ஆண்டில் நான் வழக்கு சொத்தை கிரயம் பெற்றதில் இருந்து சலீம் பாஷாவின் வாரிசுகளான 2 முதல் 6 வாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து யாருடைய சுவாதீனத்தில் இருப்பதாக சொல்கிறேன் என்றால் என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது. அவ்வாறு வழக்கு சொத்து என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். வழக்கு சொத்தை

Sd/ஷமீல் அகமது

நான் அனுபவித்து வரவில்லை பிரதிவாதிகள் தடைசெய்ய கூடாது என்று நான் குறிப்பிட்டு பரிகாரம் எதுவும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 30.08.2013-ம் தேதியில் சலீம் பாஷா இந்த வழக்கை தாக்கல் செய்த போதும், பிரதிவாதிகள் சலீம் பாஷாவிடம் தகராறு செய்ததாக தான் இந்த தாவாவை தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் கிரயம் வாங்கிய தேதியில் இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் இந்த தாவாவில் நானாகத்தான் என்னை வாதியாக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு பற்றிய விவரம் தெரிந்து தான் சொத்தை கிரயம் பெற்றேன் என்றும் ஆனால் இந்த வழக்கிற்காகவேண்டி நான் கிரயம் பெற்ற போது வழக்கு பற்றிய விவரம் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் மற்றும் செக்கு பந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/ஷமீல் அகமது (PW2)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 29.01.2019.
District. Munsif.